an International CBSE Finger Print School
Coimbatore

இயல் 8.1 - பராபரக்கண்ணி

GRADE- VI

QUESTION BANK

## அ) சிறுவினா.

**1. பராபரக்கண்ணி நூற்குறிப்பு எழுதுக.**

- பராபரக்கண்ணி பாடலை எழுதியவர் தாயுமானவர்.
- திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் தலைமைக் கணக்கராகப் பணி புரிந்தவர்.
- இப்பகுதி தாயுமானவர் பாடல்கள் என்னும் நூலில் உள்ளது.
- இந்நூலைத் தமிழ் மொழியின் உபநிடதம் எனப் போற்றுவர்.
- இப்பாடல்கள் 'பராபரக் கண்ணி' என்னும் தலைப்பில் உள்ளன.
- 'கண்ணி' என்பது இரண்டு அடிகளில் பாடப்படும் பாடல்வகை.

**2. பராபரக்கண்ணியில் தாயுமானவர் கூறுவன யாவை?**

அனைத்து உயிர்களையும் தம் உயிர்போல் கருதும் கருணை மிகுந்த சான்றோர்க்குத் தொண்டு செய்ய வேண்டும். அன்பர்களுக்குத் தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் போதும் இன்பநிலை தானே வந்து சேரும். எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும். அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன் என்று தாயுமானவர் வேண்டுகிறார்.

## ஆ) சிந்தனை வினா

1. **குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?**

குளிரால் வாடுபவர்களுக்கு வீடுகள் கட்டுக் கொடுப்பேன். ஆடைகள் வாங்கிக் கொடுப்பேன். தேநீர், காபி வாங்கிக் கொடுப்பேன். பாய், போர்வை, ஸ்வட்டர், கம்பளிப் போர்வை, குல்லா, மப்ளர் போன்றவைகள் வாங்கிக் கொடுப்பேன். வீட்டில் அடைக்கலம் தருவேன். நெருப்பு மூட்டி குளிரைப் போக்குவேன்.